கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.185/2016

வாதியின் சாட்சி என்பவரின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44-வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி ) என்னால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: முத்துபொம்மு<br>த/பெ. க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

15.10.2019

வா.சா.1

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கின் வாதிதரப்பு முதல் சாட்சி. இவ்வழக்கு எனது அப்பா வாதியாக இருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விபரங்கள் நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சான்றாவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வாதி பெயரிலுள்ள பட்டா அசல் வா.சா.ஆ.1. 21.08.2001 தேதியிட்ட எனது அப்பா தாவா சொத்தின் தென்பகுதியை பாண்டி என்பவரிடம் இருந்து பெற்ற கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.2. 29.09.2008 தேதியிட்ட எனது அப்பா பெயரிலுள்ள கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.3. 26.09.2016 தேதியிட்ட சொத்து வரி ரசீது வா.சா.ஆ.4. 22.09.2016 தேதியிட்ட பட்டா எண்.1187க்கான கணினி பட்டா வா.சா.ஆ.5. தாவா சொத்துக்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.6. எனது சித்தப்பா முத்துகிருஷ்ணன் பெயரிலுள்ள பட்டா வா.சா.ஆ.7. 04.07.1996 தேதியிட்ட பிரதிவாதி பெயருக்கு முத்துகிருஷ்ணன் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.